கல்வி அமைச்சு கல்வி அமைச்சு Ministry of Education

**கல்வி அமைச்சு**

**தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை - தமிழ்மொழி அலகு**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை - 2025(2026)

**General Certificate of Education (Ord. Level) Examination - 2025(2026)**

*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

தமிழ் மொழியும் இலக்கியமும் **I, II**
**Tamil language and literature I, II**

**22 T I,II**

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- வினாத்தாள் 1 இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.
- 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) “யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்…” இங்கு ‘**ஒரீஇ**’ என்பதன் பொருள்
(1) விலக்குதல் (2) தழுவுதல் (3) சேருதல் (4) கொல்லுதல்

2) “செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும்…” இங்கு ‘**செயிர்**’ என்பது
(1) கர்வம் (2) பாவம் (3) வீரம் (4) கோபம்

3) “எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர் கொள்ளார்” இங்கு ‘**பிறர்**’ என்பதன் **எதிர்க்கருத்து**ச் சொல்
(1) எதிரி (2) வேந்தர் (3) தமர் (4) அயலவர்

4) “மீசைக்கு விதை தூவி இளமை மழை பெய்ய பயிர் முளைத்த பருவம்…” இங்கு ‘**இளமை**’ என்பதன் என்பதன் எதிர்க்கருத்து,
(1) வழமை (2) முதுமை (3) புதுமை (4) புலமை

5) “கொற்றத் தார்க் குருசிலவ ராரென்று?..” என்பதில் ‘**தார்**’ என்பதற்குப் **பொருத்தமற்ற** சொல்
(1) மாலை (2) தொடை (3) பிணையல் (4) மணி

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6) மா, பலா ஆகியவற்றின் பிஞ்சுக்குரிய மரபுச் சொல் முறையே,
(1) வடு, மூசு (2) மூசு, வடு (3) கச்சல், மூசு (4) நுங்கு, வடு

7) பழனம், கழனி, கமம் ஆகிய சொற்கள் குறிக்கும் ஒரு பொருள்
(1) வரம்பு (2) வயல் (3) கஞ்சி (4) வனம்

8) **‘Evaluation’** என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகராக, தமிழில் வழங்கும் கலைச்சொல்
(1) அளவீடு (2) மதிப்பீடு (3) தொகையீடு (4) கணிப்பீடு

9) பேணிப் பாதுகாத்துத் தருமாறு ஒருவரை இன்னொருவரிடம் ஒப்படைத்தல்
(1) ஒப்புரவு (2) ஓலக்கம் (3) ஓம்படை (4) ஏகபோகம்

10) “மலைமடியில் கண்வளர்த்தோம்” இங்கு ‘**கண்வளர்தல்**’ எனும் மரபுத்தொடர் உணர்த்தும் பொருள்
(1) உறங்குதல் (2) இறத்தல்
(3) அறிவு உண்டாதல் (4) அறிவுகெடுதல்

11) ''நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும்'' எனும் அருஞ்சொற்றொடர் உணர்த்தும் பொருள்
(1) முதுமை (2) தெளிவு (3) வளர்ச்சி (4) இளமை

12) ''நிழல் மரங்களற்று சூரியன் தவிதவிக்கும்'' இங்கு 'தவிதவிக்கும்' என்பது
(1) இரட்டைக்கிளவி (2) அடுக்குத்தொடர்
(3) அடுக்கிடுக்குத்தொடர் (4) இணைமொழி

13) ''சிறுவர்கள் கக்கிசம் தந்து கொண்டிருந்தார்கள்'' இங்கு 'கக்கிசம்' என்பது
(1) வேண்டுதல் (2) அழைப்பு (3) வினாவுதல் (4) தொல்லை

14) 'தொழில்நுட்ப வளர்ச்சி எமது வாழ்க்கையில் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.' இக் கருத்துக்குப் பொருத்தமான உவமைத் தொடர்
(1) பொங்கல் பானையை இறக்குவது போல
(2) கல்லுளி மங்கன் போல
(3) புகையிலைக் கன்றுக்கு பாத்தி கட்டுவது போல
(4) புதிதாகப் பிறந்த குழந்தை வீட்டை அடியோடு மாற்றியது போல

15) ஒத்தபொருள் தரும் சொற்களாலமைந்த இணைமொழி
(1) அறம் மறம் (2) ஆதி அந்தம்
(3) இன்னார் இனியார் (4) அரை குறை

16) சென்ற காலம் மீள வராது என்பதைக் குறிக்கும் பழமொழி
(1) இரக்கப் போனாலும் சிறக்கப் போ
(2) அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது
(3) அன்று எழுதியவன் அழித்து எழுதுவானா?
(4) கனிந்த பழம் தானே விழும்

17) 'எமது பாடசாலை எழுபத்தைந்தாவது ஆண்டு விழாவைக் கொண்டாடியது.' எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா
(1) வெள்ளிவிழா (2) பொன்விழா (3) வைரவிழா (4) பவளவிழா

18) மாணவர்கள் மைதானத்தில் விளையாடினார்கள். இங்கு 'மைதானம்' என்பது எம்மொழிச்சொல்
(1) பாரசீகம் (2) கிரேக்கம் (3) கன்னடம் (4) தெலுங்கு

19) பின்வருவனவற்றுள் **பொருத்தமற்றது**
(1) அப்பன் - அம்மை (2) பாணன் - பாணி
(3) குரு – குருபத்தினி (4) தாதன் - தாதி

20) அரசன், சபா மண்டபத்தில் அமைச்சர், படைத்தலைவர், அறிஞர் முதலிய பரிவாரத்தினர் சூழ வீற்றிருக்கும் இடம்
(1) அரண்மனை (2) ஓம்படை (3) ஓலக்கம் (4) ஒப்புரவு

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க.**

21) பின்வருவனவற்றுள் தகர மெய் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
(1) வித்தை (2) நத்தை (3) அத்தை (4) ஆந்தை

22) கூட்டுப் பெயராக **அமையாதது**
(1) வானொலி (2) பயிற்சி (3) எறிகணை (4) நீர்வீழ்ச்சி

23) ஆக்கப் பெயரடையாக அமையும் சொல்
(1) அழகான (2) வேகமாக (3) பெரிய (4) மெல்ல

24) ஐந்தாம் வேற்றுமையில் நீங்கல் பொருளை உணர்த்தும் தொடர்
(1) என்னில் நல்லவன் (2) கல்வியில் பெரியன்
(3) மலையில் வீழ் அருவி (4) இலங்கையின் வடக்கு இந்தியா

25) "கதவால்" என்ற சொல் எவ்வகைப் புணர்ச்சி
(1) தோன்றல் (2) திரிதல் (3) கெடுதல் (4) இயல்பு

26) பின்வருவனவற்றுள் இடைப்போலியாக **அமையாதது**
(1) பழைமை (2) அமச்சு (3) நேயம் (4) அரைசு

27) "நன்றாகப் படித்தவன் பரீட்சையில் சித்தியடைந்தான்" இதில் வந்துள்ள வினையாலணையும் பெயர்
(1) நன்றாக (2) படித்தவன் (3) பரீட்சையில் (4) சித்தியடைந்தான்

28) அகராதி ஒழுங்கில் **அமையாத** சொற்றொகுதி
(1) தடம், திடம், சடம், படம்
(2) சனம், தனம், தினம், மனம்
(3) அரம், உரம், தரம், மரம்
(4) கோபம், சோகம், தாகம், பாகம்

- **29, 30 ஆம் வினாக்களில் பொருத்தமற்ற உதாரணங்கள் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவு செய்க**

29)
(1) உவமை உருபு - போல, புரைய, ஒப்ப
(2) வேற்றுமை உருபு - கண், இல், அது
(3) இறந்தகால இடை நிலைகள் - த், ட், ற்
(4) தொழிற்பெயர் விகுதிகள் - தல், அல், ஆன்

30)
(1) பெயர்ச்சொல் - மரம் , நாய் , வீடு
(2) வினைச்சொல் - ஓடினாள் , பார்த்தான் ,ஆடினான்
(3) இடைச்சொல் - மேல் , முன் , கழி
(4) உரிச்சொல் - சால , உறு , நனி

- **புள்ளிக்கோடிட்ட இடத்தினை நிரப்புவதற்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31) நீதிமன்றத்தில் சாட்சிகள் வழக்குத் தொடர்பாக …………..… அளித்தனர்.
(1) பிரசாரம் (2) வாக்குமூலம்
(3) வாதம் (4) பிரதிவாதம்

32) மாணவர் மன்றத்தில் செயலாளரினால் ……………… வாசிக்கப்பட்டது.
(1) கருத்துரை (2) செய்தி (3) பத்திரிகை (4) அறிக்கை

33) வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பட்ட ………………. சீர் செய்வதற்காக அரசாங்கம் வெளிநாட்டு உதவியை நாடியது.
(1) துண்டு விழும் தொகையை 2) பணப்பற்றாக் குறையை
(3) கொடுப்பனவை 4) பண அதிகரிப்பை

34) பறவைகள் கூட்டங் கூட்டமாய் …………………
(1) பறந்தார் (2) பறந்தனர் (3) பறந்தது (4) பறந்தன

35) உன்மேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் வேலையிலிருந்து ……………………
(1) நீக்கப்படுவாய் (2) நீக்கப்பட்டாய்
(3) நீக்கப்படுகிறாய் (4) நீக்கப்பட்டுவிட்டாய்

36) ஆன்றோர் முன்னால் சொல்லத்தகாத சொல்லை வேறொரு வகையால் சொல்வது ……… ………… ஆகும்.
(1) மங்கலம் (2) இடக்கரடக்கல் (3) மரூஉ (4) குழூஉக்குறி

- **தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

தமிழா! தமிழா! எனும் சொல் கேட்டால்
தலைநிமிர் நின்றிடும் தாய்நாடு!
விழியினில் ஒளிதரும் நீயே,
விண்ணினும் உயர்ந்த செல்வமே!
கடலினும் பரந்த கருணையுடன்,
காவலாய் நிற்கும் காவியம் நீ!
மணிமொழி பேசும் மக்கள் நாட்டில்,
மறைவொன்றும் இல்லை – அறிவே நீ!

37) இக் கவிதை எதைப் பற்றிக் கூறுகின்றது?
(1) இயற்கையின் அழகு (2) மனித நேயம்
(3) கல்வியின் முக்கியத்துவம் (4) தாய்நாட்டின் பெருமை

38) கவிஞர் நாட்டை எவற்றுடன் ஒப்பிடுகிறார்?
(1) மலை, மண் (2) விண், கடல்
(3) ஆறு, கடல் (4) நிலம், மலை

39) ''விழியினில் ஒளி தரும் நீயே'' இங்கு 'நீ' என்பது யாரைக் குறிக்கின்றது?
(1) தாய்நாடு (2) சூரியன் (3) நதி (4) கவிஞர்

40) கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெறவைத்தால், கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கு பொருத்தமான வைப்புமுறையைத் தெரிவு செய்க.

அ) சிலர் போக்குவரத்து விதிகளை மதிக்காமல் வாகனங்களை ஓட்டுகின்றனர்.

ஆ) அரசும் மக்களும் இணைந்து விபத்துக்களைத் தடுக்க விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும்.

இ) வீதி விபத்துக்கள் நாள்தோறும் அதிகரித்து வருகின்றன.

ஈ) போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடிப்பதே பாதுகாப்பான பயணத்தின் அடிப்படை

உ) இதனால் பல உயிர்கள் இழக்கப்படுகின்றன.

(1) இ, ஈ, அ, ஆ, உ (2) ஈ, உ, இ, ஆ, அ

(3) இ, அ, உ, ஈ, ஆ (4) ஈ, இ, உ, ஆ, அ

கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி
Ministry of Education Ministry of Education Ministry of Education Ministry of Education Ministry of Education Ministry of

**கல்வி அமைச்சு**

**தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை - தமிழ்மொழி அலகு**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை - 2025(2026)

**General Certificate of Education (Ord. Level) Examination - 2025(2026)**

தமிழ் மொழியும் இலக்கியமும் **II**
**Tamil language and literature II**

**22 T II**

**கவனிக்குக.**
- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
- ❖ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

**1. சுருக்கமான விடை எழுதுக.**

*1.* பின்வரும் தொடரைச் சந்தி பிரித்தெழுதுக.
“நண்ணு றப்பெறல் திண்ணம தாமென”

*2.* பின்வரும் வாக்கியத்திலுள்ள எழுவாய், பயனிலையை இனங்காண்க.
“புலவன் மனத்தேயிடித்து முழங்கி மின்னிப் பொழியும்படிக்குக் கவி காளமேகம் புறப்பட்டதே”

*3.* பின்வரும் பேச்சுவழக்குத் தொடரை எழுத்து வழக்கில் தருக.
‘மனெ நீ வெயிலுக்க வராம தங்கச்சிய பார்த்துக்க”

*4.* பின்வரும் வாக்கியத்தைப் பொருத்தமான நிறுத்தக்குறிகளை இட்டு மீண்டும் எழுதுக.
கொஞ்சம் இரு எனக்கு ஞாபகத்தில் இல்லை

*5.* “வளை” என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வருமாறு தனித்தனி வாக்கியங்கள் அமைக்குக.

*6.* பின்வரும் வாக்கியத்தை வழுவற்ற வகையில் திருத்தி எழுதுக.
“பின்வரும் வினாக்களுள் ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக”

*7.* பின்வரும் செய்வினை வாக்கியத்தைச் செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.
பாடசாலை மாணவர்களுக்காக ஆசிரியர் நாடகத்தை நடித்துக் காட்டினார்.

*8.* பின்வரும் வாக்கியத்திலுள்ள மயக்கத்தை சுட்டிக்காட்டி, மீண்டும் எழுதுக.
“தொலைந்து போன கதிரவனின் சட்டையில் கறை படிந்திருந்தது”

*9.* அவன் நன்றாகக் கவிதை எழுதுவான்
அவன் சிறுகதை எழுதமாட்டான்
மேற்படி இரு வாக்கியங்களையும் பொருத்தமான இணைப்பிடைச் சொல்லைப் பயன்படுத்தி, ஒரே வாக்கியமாக எழுதுக.

*10.* “அம்மாவின் மூக்குத்திக் கல்லு மாதிரி வியர்வைத் துளிகள் நெற்றியில், கன்னத்தில், கழுத்தில் மின்னுகிறது. இதில் பயின்றுள்ள அணியைக் குறிப்பிடுக.

*(20 புள்ளிகள்)*

**2. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலைப்பிடுக.**

I. கல்வி என்பது அடிப்படை உரிமைகளுள் ஒன்றாகும். இலங்கையில் இலவசக் கல்வி நடைமுறையில் இருந்தாலும் கணிசமான சிறுவர்கள் கல்வியைத் தொடரமுடியாத நிலை காணப்படுகிறது. அவ்வாறு அவர்கள் கல்வியைப் பெறமுடியாமல் இருப்பதற்கான காரணங்களை எடுத்துக்காட்டியும் அக்குறைபாடுகளை நீக்குவதற்கு எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் போன்ற விடயங்களையும் உள்ளடக்கிய **விளக்கக் கட்டுரை**

II. தொழில்நுட்ப வளர்ச்சியால் இன்று மாணவரிடையே செல்லிடப்பேசி, கணினி முதலான இலத்திரனியல் கருவிகளின் பாவனை அதிகரித்துள்ளது. மின்னஞ்சல், முகநூல், வலையொளி, படவரி, புலனம் முதலியவற்றினூடாக அவர்கள் விரைவாகத் தகவல்களைப் பெறுகிறார்கள், பரப்புகிறார்கள், அறிவு பெருகுகிறது. எனினும் இவற்றால் படிப்பிற் கவனமின்மை, துஷ்பிரயோகங்கள் என்பவற்றிற்கும் வழியேற்பட்டுவிடுகிறது. இவ்வாறாக இலத்திரனியல் ஊடகங்களால் மாணவ சமூகத்திற்கு ஏற்படும் நன்மை, தீமை பற்றிய இருவருக்கிடையிலான **உரையாடல்.**

III. இன்றைய சமுதாயத்தில் வெளிநாடுகளுக்குச் செல்வது என்பது பெரும்பாலான இளைஞர்களின் குறிக்கோளாக மாறியுள்ளது. கல்வி, வேலைவாய்ப்பு, உயர்ந்த வாழ்க்கைத்தரம், வசதிகள் போன்ற பல காரணங்களுக்காக இவ்வாறு வெளிநாடு செல்கின்றார்கள். இருந்தாலும் இதனால் பல பாதக நிலைமைகளும் ஏற்படுகின்றன. இதனை உள்ளடக்கி நீர் ஆற்றும் **மேடைப்பேச்சு.**

IV. கிழக்கில் உதிக்கும் சூரியனின் பொன்னிறக் கதிர்கள் மேனியை வருடிக்கொள்ள, படுக்கையில் இருந்து எழுந்த பூங்கொடி சோபை இழந்தவளாக இருந்தாள். தாய் பரிமளத்தின் நேற்றைய புலம்பல் அவளுக்கு எரிச்சலூட்டுவதாக இருந்தது. பெண்பிள்ளை வீட்டைவிட்டுச் சென்றால் வரும்வரை வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு இருக்கும் அவளின் கவலையும் சரியானதே. அதற்கேற்றாற்போல விதிவிலக்காக சில அசம்பாவிதங்களும் நடந்துதான் விடுகின்றன. அன்று நடந்த அந்தச் சம்பவத்தின் பின் அவளும் நிலை தளர்ந்துதான் போனாள் என்ற வகையில் அமையும் ஒரு **சிறுகதை.**

(25 புள்ளிகள்)

**3. பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)**

நிடதநாடு நீர்வளமும் நிலவளமும் உடையது. சாகரஞ் சூழ்நன்னாட்டின் தலைசிறந்த நாடு. பல நாடுகளுக்கு முதன்மையாகத் திகழ்ந்தது. தாமரை மலர், மலருக்குள்ளே சிறந்தது. பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை என்று தேவாரம் பாராட்டிப் பேசுகின்றது. தாமரை மலர் வளப்பமும் வண்மையும் நிறைந்தது. ஆகவே நாடுகளுக்குள்ளே முதன்மையான நிடத நாட்டை மலர்களுக்குள்ளே சிறந்த தாமரை மலருக்கு ஒப்பிட்டுரைக்கின்றான் கவிஞன்.

அந்த வளமுடைய நிடத நாட்டை ஆட்சி செய்தவன் நளன். அவன் மன்னருக்குள்ளே அழகாலும் ஆட்சித் திறத்தாலும் சிறந்து விளங்கினான். அன்னப் பறவை, பறவைகளுக்குள் சிறந்தது. அழகாலும் அறிவாலும் உயர்ந்தது. ஆகவே மன்னருக்குள் தலைசிறந்த நளன் பறவைகளுக்குள்ளே தலைசிறந்த அன்னப் பறவையைப் போன்று விளங்கினான். நிடத நாட்டிலிருந்து ஆட்சிசெய்த நளன் தாமரைப் பூவில் வீற்றிருக்கும் அன்னப் பறவையைப் போல கவிஞன் கண்ணுக்குத் தோன்றினான். எனவே கவிஞன் வளமுள்ள நிடத நாட்டைச் செழிப்புள்ள தாமரைப் பூவுக்கும், அழகுள்ள நளனை கவின் நிறைந்த அன்னப் பறவைக்கும் ஒப்பிட்டுரைத்தான்.

நிடத நாட்டை ஆண்ட நளன் கலியின் வஞ்சனைக்கு ஆளானான். நாட்டை இழந்தான். காட்டை நோக்கிப் புறப்பட்டான். நிடத நாட்டு ஆட்சியைத் தாங்கினான் புட்கரன். இந்நிகழ்ச்சி கவிஞனின் கற்பனையைச் சிறகடித்துப் பறக்கவைத்தது. நளன் நிடத நாட்டை விட்டு நீங்கிய துன்ப நிகழ்ச்சி, தாமரை மலரில் வீற்றிருந்த அன்னம் அந்த மலரை விட்டுப் பிரிந்தது போலத் தோன்றிற்று. அன்னம் மென்மையான கால்களையும் சிறகுகளையும் உடையது. அந்த மென்மையான கால்கள் நொய்மையான இதழ்களையுடைய தாமரை மலரை அணி செய்ததேயன்றி, வறுமைப்படுத்தியதன்று. அதேபோன்று நிடத நாட்டைவிட்டு நளன் நீங்கியமை அன்னப் பறவை தாமரைப் பூவை விட்டு நீங்கியது போலக் கவிஞன் கண்ணுக்குத் தெரிந்தது. நளன் நாட்டைவிட்டு நீங்கியதும் புட்கரன் ஆட்சிக்கு வந்தான்.

*(10 புள்ளிகள்)*

**4. பின்வரும் உரைநடைப்பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

வாசிப்பு, எழுத்து, கணக்கு முதலான பாடத்துறைகளில் முறையான கல்வியைத் தொடங்குவதற்கும் அவற்றால் அதிகபட்ச பலனைப் பெறுவதற்கும் ஐந்து வயதுப் பிள்ளைகளுக்கு முதிர்ச்சி போதாது என்பது பல்வேறு நாடுகளில் இதுபற்றிப் பல்வேறு ஆராய்ச்சிகளைச் செய்த கல்வியியல் உளவியல் நிபுணர்களின் கருத்தாகும். முறையான கல்வி தொடங்க ஏற்ற வயதைத் தீர்மானிக்கும் ஒரேவகைச் சூழலிலிருந்து ஐந்து வயதிலும் கல்வி தொடங்கிய இரு பிள்ளைகள் எதிர்காலத்தில் கல்வித்துறையிலே ஈட்டும் சாதனைகளைப் பரிசீலித்துப் பார்த்தல் வேண்டும். அவ்வாறான நுண்ணிய பரிசோதனையின்றி கல்வி தொடங்கும் வயது பற்றிச் சொல்லப்படும் அபிப்பிராயங்கள் அர்த்தமற்றவை. வேறு நாடுகளிற் செய்யப்பட்ட அத்தகைய பரிசோதனைகளால் முறையான கல்விக்கு ஐந்து வயது மிகவும் முதிர்ச்சி குறைந்தது என்ற முடிவுக்கு வரக்கூடியதாக இருந்தது. உடல், கை, கால், இந்திரியங்கள், தேகசக்தி ஆகியவற்றுக்குப் பயிற்சி அளியுங்கள். ஆனால் இயலும் வரைக்கும் பிள்ளைகளின் மனதிற்கு வேலை கொடாமற் பேணுங்கள் என்ற பிரெஞ்சுத் தத்துவஞானி பெரியார் ஜே.ஜே.ரூஸோ தெரிவித்துள்ளார். ஜே.பியாஜே முதலான உளவியல் நிபுணர்களின் ஆராய்ச்சிப்படியும் பிள்ளைகளின் தர்க்க ஆற்றல் ஏழு வயதாகும் வரைக்கும் வளர்ச்சி பெறாதிருக்கும் எனத் தெரியவந்துள்ளது.

I. ஐந்து வயதுப் பிள்ளைகளுக்கு முறையான கல்வி தொடங்குதல் பற்றிய உளவியல் நிபுணர்களின் கருத்து என்ன?
II. பிள்ளைகளின் தர்க்க ஆற்றல் எந்த வயதிலிருந்து வளர்ச்சி பெறுகிறது?
III. பிள்ளையின் தர்க்க ஆற்றல் பற்றி ஆராய்ந்த உளவியலாளர்கள் யாவர்?
IV. பிரெஞ்சுத் தத்துவஞானி எதனை வலியுறுத்துகின்றார்?
V. பின்வரும் சொற்களுக்கு பொருள் கூறுக.
அ) உளவியல்
ஆ) நிபுணர்

*(10 புள்ளிகள்)*

5. அம்பாள்புரம் கிராமத்தில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட வரட்சிநிலை காரணமாக குடிநீருக்கான தட்டுப்பாடு நிலவுகிறது. இங்குள்ள மக்கள் குடிநீரைப் பெற பல மைல்கள் செல்ல வேண்டியுள்ளது. நீரைப் பெற்றுக்கொள்வதில் உள்ள சிக்கல்களால் பல்வேறு பிரச்சினைகளும் அதிகரித்துள்ளன. அம்பாள்புரம் பிரதேச சபைத் தவிசாளருக்கு இவ்விடயங்களைத் தெரியப்படுத்தி, கிராமத்தின் சில இடங்களில் நீர்த்தாங்கிகளை வைத்து மக்கள் குடிநீரைப் பெற வழிசெய்யுமாறு கோரி, கிராம முன்னேற்றச் சங்கத்தின் செயலாளர் திரு.த.தணிகைமாறன் என உம்மைக் கருதி ஒரு கடிதம் வரைக.

அல்லது

அண்மைக்காலமாக போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. இதனால் மாணவர்கள் தங்களின் கல்வியைத் தொடருவது மிகக் கடினமாக உள்ளது. இன்றைய சிறார்களின் நாளைய எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. கல்விகற்ற சமூகம் உருவாகுவதும் பெரும் சவாலாக மாறியுள்ளது. எனவே இப்பழக்கத்தை இல்லாதொழித்து சிறந்ததொரு சமூகத்தை உருவாக்குதல் தொடர்பாக பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக திருநகர் இளைஞர் கழகத்தின் சார்பில் 100 சொற்களில் அமைந்த துண்டுப்பிரசுரம் ஒன்று எழுதுக.

- போதைப்பொருள் பாவனையின் தீமைகள்
- இளம் சந்ததியினரிடம் அவை ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள்
- அவற்றைத் தவிர்க்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்

*(15 புள்ளிகள்)*

முழுப் பதிப்புரிமையுடையது All Rights Reserved] 

கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி
Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministr

கல்வி அமைச்சு

தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை - தமிழ்மொழி அலகு

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை - 2025(2026)

**General Certificate of Education (Ord. Level) Examination - 2025(2026)**

*இரண்டு மணித்தியாலம்*
***Two hours***

தமிழ் மொழியும் இலக்கியமும் **III**
**Tamil language and literature III**

**22 T III**

**அறிவுறுத்தல்கள் :**

- அறிவுறுத்தலுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- **1, 2, 3, 4** ஆகிய வினாக்களுக்கும் **5, 6, 7** ஆகிய வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**01. சுருக்கமான விடை தருக.**

i “முழங்குதிரைப் புனலருவி கழங்கெழுத்தாடும்
முற்றமெங்கும் பரந்து பெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்..”
அ) ‘முழங்கு திரை’ என்பதன் பொருளை எழுதுக
ஆ) இங்கு குறிப்பிடப்படும் விளையாட்டு எது?

ii “கதியிழக்கினுங் கட்டுரை யிழக்கிலோ மென்றான்
மதியிழந்து தன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்..”
அ) கட்டுரை என்பதன் பொருளைத் தருக.
ஆ) இதனைப்பாடிய புலவர் யார்?

iii “சூடுகின்ற துழாய் முடியோன் சுரருடனே..”
அ) சுரர் எனப்படுபவர் யார்?
ஆ) துழாய் முடியோன் எனப்படுபவன் யார்?

iv. “வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது..”
அ) இப்பாடலில் இடம்பெற்றுள்ள அணியினைக் குறிப்பிடுக.
ஆ) இப்பாடலைப் பாடியவர் யார்?

v. “மகன் குவளை மலர்போன்ற கருநீலக்கண்களை இன்னும் அகல விரித்து என்னைப்பார்த்தான்..”
அ) இங்கு மகன் எனச் சுட்டப்படுபவர் யார்?
ஆ) இதில் ‘என்னை’ என்பது யாரைக் குறிக்கின்றது?

vi “அது கிடக்க எடுத்துக்கொண்டு வா தந்தி தபாற் கட்டுக்களை..”
அ) இக்கூற்றை கூறியவர் யார்?
ஆ) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?.

vii ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக்கு அழுந்தும் அளறு
அ) இக்குறளைக் கொண்டு கூட்டி எழுதுக.
ஆ) அறிவற்றவனின் செயல் எத்தகையது?

viii “அன்னப்பேடை சிறை இலது ஆய்க்கரை
துன்னிற்று என்னவும் வந்தது, தோணியே..”
அ) துன்னிற்று என்பதன் கருத்தை எழுதுக
ஆ) தோணி கரையை அடைந்த விதம் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

ix. “யாமிரப்பவை பொருளும் பொன்னும் போகமுமல்ல, அன்பால் அன்பும் அருளும் அறனும்…”
அ) இரந்து கேட்பவை எவை?
ஆ) போகம் என்பதன் பொருள் யாது?

x. “..கோதையரை எப்பொழுதும் வீட்டிலடைத்து வைக்கும் விரகிலருக் கியாதுரைப்பேம்”
அ) விரகிலர் என்பதன் பொருள் யாது?
ஆ) வீட்டிலடைத்து வைக்கப்படுவோர் யார்? **(20 புள்ளிகள்)**

01. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1. சூழமேதி இறங்குந் துறையில்
சொரியும் பாலைப் பருகிய வாளை
கூழைவாசப் பலாவினிற் சாய
வாழை சாய்ந்தொரு தாழையிற்றாக்க
வருவிருந்துக் குபசரிப்பார் போல்
தாழை சோறிட வாழை குருத்திடுஞ்
சந்திர சூடர் தென்னாரிய நாடெங்கள் நாடே

அ) இப்பாடலில் வரும் இறைவனின் சிறப்புக்கள் யாவை?
ஆ) ‘சூழமேதி இறங்குந் துறையில்’ என்பதன் பொருளை எழுதுக.

2. அறந்தானே யென்கின்ற வயல்நின்றா
டனை நோக்கி, யைய வன்பி
னிறைந்தாளை யுரையென்ன, நெறிதிறம்பாத்
தன்மெய்யை நிற்ப தாக்கி,
இறந்தான் றனிளந்தேவி, யாவர்க்குந்
தொழுகுலமா மிராமன் பின்பு
பிறந்தானு முளனென்னப் பிரியாதான்
றனைப் பயந்த பெரியா ளென்றான்.

அ) ‘அறந்தானே’ என்னும்படியாக நின்றவர் யார்?
ஆ) ‘நெறிதிறம்பாத் தன்மெய்யை நிற்ப தாக்கி’, என்ற தொடரை விளக்குக.‘

3. புலங்க ளோடு கரணமும் ஆவியும்
போந்து நின்ற விருப்புடன் மானிடன்
நலங்க ளேது விரும்புவன் அங்கவை
நண்ணு றப்பெறல் திண்ணம் தாமென,
இலங்கு நூலுணர் ஞானியர் கூறுவர்
யானும் மற்றது மெய்யெனத் தேர் ந்துளேன்:
விலங்கி யற்கை யிவையெனில் யாமெலாம்
விரும்பு மட்டினில் விண்ணுற லாகுமே.

அ) இலங்கு நூலுணர் ஞானியர் என்போர் யார்?
ஆ) விலங்கியற்கை எனுந்தொடரை விளக்குக.

4. கிராமப்புற மக்களின் வாழ்வியல் அம்சங்கள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், தொழில் முயற்சிகள் முதலானவற்றை அடிப்படையாகக்கொண்டு அவர்களது உள்ளத்திலிருந்து இயல்பாகவே ஊற்றெடுக்கும் பாடல்களே நாட்டார் பாடல்களாகும். இப்பாடல்கள் கற்றோர், கல்லாதோர் என்ற வேறுபாடின்றி நாட்டுப்புற மக்களால் இயல்பாகவே பாடப்படுபவை. இப்பாடல்கள் நாடோடிப்பாடல்கள், கிராமியப்பாடல்கள், வாய்மொழிப்பாடல்கள் எனவும் குறிப்பிடப்படுவதுண்டு. மனிதரின் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள நிகழ்வுகள் இப்பாடல்களின் பொருள்களாக அமைந்திருப்பதைக் காணலாம்.

அ) நாட்டார் பாடல்கள் எவற்றை அடிப்படையாகக் கொண்டவை?

ஆ) இப்பாடல்களின் பொருள்களாக அமைவனவற்றை குறிப்பிடுக.

5. புறநானூறு எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. அகத்திணைக்குள் அடங்காத அனைத்தும் புறத்திணை எனப்படும். முக்கியமாக சங்ககாலத்தில் தமிழ் நாட்டினை அரசாட்சி செய்த மன்னர்களின் வீரம், ஆட்சித்திறன், கொடைச்சிறப்பு, போர், தோற்றப்பொலிவு முதலானவற்றையும் சங்கப்புலவர்களின் நற்குணங்களையும் தெளிவாக எடுத்து இயம்புபவை புறநானூற்றுச் செய்யுள்களாகும்.

அ) புறத்திணை என்பதை விளக்குக?

ஆ) புறநானூற்றுச் செய்யுள்களில் கூறப்படும் செய்திகள் எவை?

(20 புள்ளிகள்)

03. திருக்குறள் 'பேதைமை' என்னும் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு,

அ) பேதைமை பற்றிய இலக்கணம்

ஆ) பேதையரின் நட்பு

இ) அணிக்கையாளுகை

என்பனவற்றை விளக்குக.

அல்லது

நீதிப்பாடல்கள் பகுதியிலுள்ள,

அ) வெற்றிவேற்கை எனும் நூலில் வரும் "தேம்படு பனையின்…" என்ற பாடலில் உருவம் தொடர்பாகக் கூறப்பட்டவை

ஆ) வாக்குண்டாம் பாடலில் அடக்கமுடையாரின் சிறப்பு

என்பனவற்றை விளக்குக. (15 புள்ளிகள்)

04. திருக்குற்றாலக் குறவஞ்சியில்

அ) வாழ்வியல் அம்சங்கள்

ஆ) கையாளப்பட்டுள்ள அணிகள்

என்பவற்றை எடுத்துக்காட்டி விளக்குக.

**அல்லது**

அ) 'தச்சன் செய்த..' என்ற பாடலில் தலைவன் வராதவிடத்தும் தலைவியின் நிலை

ஆ) 'இனிநினைந்து..' என்ற பாடலில் இளமைக்காலச் செயற்பாடுகள்

என்பன வெளிப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக (15 புள்ளிகள்)

**5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கு மட்டும் விடை எழுதுக.**

05. கிருட்டிணன் தூதுச் சருக்கத்தில்,

அ) போரினைத் தவிர்ப்பதற்கு தருமன் கூறும் நியாயங்கள்

ஆ) வீமனது கூற்றின் மூலம் வெளிப்படும் போர்க்குணம் ஆகியவற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

06. பாரதியார் சுயசரிதையில்

அ) பாரதியின் தேசப்பற்று

ஆ) இலக்கினை அடைய பாரதி கூறும் அணுகுமுறைகள்

என்பவற்றைத் தெளிவுபடுத்துக (10 புள்ளிகள்)

07. கம்பரின் குகப்படலத்தில்

அ) கோசலையின் உயர்ந்த மனப்பாங்கு

ஆ) சுமித்திரையின் சிறப்புகள்

என்பவற்றை எடுத்துக்காட்டுக.

(10 புள்ளிகள்)